

கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக கூட்டரங்கில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தங்க நகை பூங்கா அமைப்பது தொடர்பான கலந்தாய்வு கூட்டதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் சிட்டார்க் (SiTarc) நிறுவனம் சார்பில் ரூ.9.97 கோடி மதிப்பில் மின் வாகன (EV) மோட்டார் சோதனைக்கான பொது வசதி மையத்தை (Common Facility Centre CFC) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உடன் துறை கூடுதல் தலைமை செயலாளர் மரு.அதுல் ஆனந்த் , மேலாண் இயக்குநர் ஏ.கார்த்திக், மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் , தொழில்துறை ஆணையர் எல்.நிர்மல் ராஜ் , தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன பொது மேலாளர் எஸ்.தனலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

## ‘அரசியல் சட்டமே’ அனைத்தையும் இயக்கும் வழிகாட்டு நெறிமுறை!

# அனைத்துப் பிரச்சினைகளிலும் உச்சநீதிமன்றத்தின் அணுகுமுறை இந்த வழியில் அமைவதே நல்லது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

**சென்னை, மே 21-**

**‘அரசியல் சட்டமே’ அனைத்தையும் இயக்கும் வழிகாட்டு நெறிமுறை எனவும் அனைத்துப் பிரச்சினைகளிலும் உச்சநீதிமன்றத்தின் அணுகுமுறை இந்த வழியில் அமைவதே நல்லது எனவும் ‘தீக்கதிர்’ நாளேடு தலை யங்கத்தில் தெரிவித்துள்ளது.**

நீதித்துறையோ, அரசோ, நாடாளுமன்றமோ உயர்வானவை அல்ல; இந்தியாவின் அரசமைப்புச் சட்டமே உயர்வானது என்று உச்சநீதிமன்றத்தின் 52ஆவது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள பி.ஆர்.கவாய் கூறியுள்ள கருத்து இன்றைய சூழலில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.



தீக்கதிர்

2025 மே 20 செவ்வாய்க்கிழமை

அரசியல் சட்டம் வழிகாட்டட்டும்

நீதித்துறையோ, அரசோ, நாடாளுமன்றமோ உயர்வானவை அல்ல; இந்தியாவின் அரசமைப்புச் சட்டமே உயர்வானது என்று உச்சநீதிமன்றத்தின் 52ஆவது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள பி.ஆர்.கவாய் கூறியுள்ள கருத்து இன்றைய சூழலில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

நாடாளுமன்றம், நீதித்துறை, அரசு ஆகிய மூன்று தூண்களும் அரசமைப்புச் சட்டத்தின்படி செயல்பட வேண்டும். மூன்று தூண்களும் சரிசமமானவை. அவை மூன்றும் பரஸ்பரம் மரியாதை அளித்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஒன்றிய அரசின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மே மாதம் 13ஆம் தேதி உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்வி [illegible]

நாடாளுமன்றம், நீதித்துறை, அரசு ஆகிய மூன்று தூண்களும் அரசமைப்புச் சட்டத்தின்படி செயல்பட வேண்டும். மூன்று தூண்களும் சரிசம மானவை. அவை மூன்றும் பரஸ்பரம் மரியாதை அளித்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். ஒன்றிய அரசின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மே மாதம் 13ஆம் தேதி உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்விகளை எழுப்பி குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். தமிழ்நாடு மாநில அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநரின் அதிகாரம் மற்றும் சட்டமுன் வரைவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான கால வரம்பை ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் நிர்ணயித்துள்ள நிலையில் குடியரசுத் தலைவர் பதவியைப் பயன்படுத்தி ஒன்றிய அரசு இந்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

குடியரசுத் தலைவர் மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் பதவிகளையும் தவறாகப் பயன்படுத்த ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசு தயங்குவதில்லை. ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து ஆய்வு நடத்த அமைக்கப்பட்ட குழுவின் தலைவ ராக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை தலைவராகவும் நியமித்தது. ஒன்றிய அரசின் விருப்பத்திற்கேற்பவே அந்தக் குழுவும் அறிக்கையை அளித்துள்ளது.

இதுஒருபுறமிருக்க, குடியரசுத் தலைவரின் பெயரால் எழுப்பப்பட்டுள்ள இந்த கேள்விகள் ஒன்றிய அரசினால் எழுப்பப்பட்ட கேள்விகளே ஆகும். இந்த நிலையில் உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்விகளை எழுப்பி ஜனாதிபதி அனுப்பி யுள்ள குறிப்பை எதிர்க்க வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 8 மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தமிழ்நாட்டிற்கு மட்டும் பொருந்துவதல்ல. அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தக் கூடியது என்று அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றம் ஆளுநர்களின் அடாவடி தொடர்பான வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதை நீர்த்துப் போகச் செய்ய ஒன்றிய அரசு முயல்வதன் வெளிப்பாடே குடியரசுத் தலைவர் பெயரால் அனுப்பப்பட்டுள்ள குறிப்பாகும். நாடாளுமன்றம், அரசு மற்றும் நீதித்துறை ஆகிய துறைகள் அனைத்தும் அரசியல் சட்டத்தின்படியே செயல்பட வேண்டியவை. அரசியல் சட்டமே அனைத்தையும் இயக்கும் வழிகாட்டு நெறிமுறையாகும். இதை புதிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குறிப்பிட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அனைத்துப் பிரச்சினைகளிலும் உச்சநீதிமன்றத்தின் அணுகுமுறை இந்த வழியில் அமைவது நல்லது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## சட்டமன்றத் தேர்தல் : சென்னை – காஞ்சிபுரம் – திருவள்ளூர்

# மாவட்டச் செயலாளர்கள் கவனத்திற்கு!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வேண்டுகோள்!



சென்னை தெற்கு, தென்மேற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு, வடகிழக்கு, திருவள்ளூர் கிழக்கு, மத்திய, மேற்கு, மற்றும் காஞ்சிபுரம் வடக்கு ஆகிய கழக மாவட்ட செயலாளர்களின் கவனத்திற்கு.

சட்டமன்ற தொகுதி வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய தேர்தல் பணிகள் குறித்த நிர்வாகிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளின் விவரம்:

| வ. எண். | தேதி | கழக மாவட்டம் | சட்டமன்ற தொகுதி | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | 22-05-2025 | சென்னை மேற்கு | 1. அண்ணா நகர்<br>2. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி<br>3. ஆயிரம் விளக்கு | 10.00 AM<br>11.00 AM<br>12.00 PM |
| 2. | 22-05-2025 | சென்னை தென் மேற்கு | 1. மயிலாப்பூர்<br>2. தி. நகர். | 02.00 PM<br>03.00 PM |
| 3. | 26-05-2025 | சென்னை வடக்கு | 1. பெரம்பூர்<br>2. ஆர்.கே. நகர்<br>3. இராயபுரம் | 10.30 AM<br>11.30 AM<br>12.30 PM |
| 4. | 26-05-2025 | சென்னை கிழக்கு | 1. எழும்பூர்<br>2. துறைமுகம்<br>3. திரு.வி.க. நகர் | 03.30 PM<br>04.30 PM<br>05.30 PM |
| 5. | 27-05-2025 | சென்னை வடகிழக்கு | 1. மாதவரம்<br>2. திருவொற்றியூர் | 11.00 AM<br>12.00 PM |
| 6. | 05-06-2025 | திருவள்ளூர் மத்திய | 1. பூந்தமல்லி<br>2. ஆவடி | 11,00 AM<br>12.00 PM |
| 7. | 05-06-2025 | திருவள்ளூர் மேற்கு | 1. திருத்தணி<br>2. திருவள்ளூர் | 02.00 PM<br>3.00 PM |
| 8. | 05-06-2025 | திருவள்ளூர் கிழக்கு | 1. கும்மிடிப்பூண்டி<br>2. பொன்னேரி | 04.00 PM<br>05.00 PM |
| 9. | 06-06-2025 | காஞ்சிபுரம் வடக்கு | 1. ஸ்ரீபெரும்புதூர்<br>2. செங்கல்பட்டு<br>3. திருப்போரூர் | 10,30 AM<br>11.30 AM<br>12.30 PM |
| 10. | 07-06-2025 | காஞ்சிபுரம் வடக்கு | 1. தாம்பரம்<br>2. பல்லாவரம்<br>3. ஆலந்தூர் | 10,30 AM<br>11.30 AM<br>12.30 PM |
| 11. | 09-06-2025 | சென்னை தெற்கு | 1. வேளச்சேரி<br>2. சோழிங்கநல்லூர் | 10,30 AM<br>11.30 AM |
| 12. | 09-06-2025 | சென்னை தெற்கு | 1. மதுரவாயல்<br>2. விருகம்பாக்கம்<br>3. சைதாப்பேட்டை | 03.30 PM<br>04.30 PM<br>05.30 PM |
| 13. | 10-06-2025 | சென்னை கிழக்கு | 1. வில்லிவாக்கம்<br>2. அம்பத்தூர்<br>3. கொளத்தூர் | 10,30 AM<br>11.30 AM<br>12.30 PM |

மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்களில், சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர்கள், வட்ட, பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொள்வதற்கு மாவட்ட கழகச் செயலாளர்கள் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆ.இராசா எம்.பி.,**
கழக துணைப் பொதுச் செயலாளர்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 90 வது நாள்!

## எழும்பூர் வடக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,மே.21-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 90 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (20.5.2025) எழும்பூர் வடக்கு பகுதி: இடம்: 1) 78 அ வட்டம், தானா தெரு,





புரசைவாக்கம் 2) 99வது வட்டம் - ஆர்.கே.புரம் சாலை, ஓட்டேரி, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சொ. வேலு, வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள்: பரிதிஇளம் சுருதி, பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், க.நந்தீஸ்வரன், டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், ஆர்.பாபு, வி.விஜய்குமார், வி. அபாய், டி.தயாளன், ந.பாலு, சு.மோகன், ஆர்.எம்.ரங்கநாதன் எழும்பூர் வடக்கு / தெற்கு பகுதி செயலாளர்கள்: தி.தயாளன், சு.மனோகர், ஆர்.எம். ரங்கநாதன், ஆர்.பாபு, வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், புனிதா. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காரைக்குடி இராம. சுப்பையா
### மே 21 (1997)



**சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.**

**1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.**

**1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.**

**90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## 140 வது வார்டு மாமன்ற முன்னாள் உறுப்பினர்

# சைதை இரா.லோகநாதன் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## காக்கும் கரங்கள் கருணை இல்லத்தில் உணவு வழங்கல்!



சென்னை, மே 21 -

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினர் சைதை இரா.லோகநாதன் 10 ஆம் ஆண்டு நினை வஞ்சலி நிகழ்ச்சி இன்று (21.5.2025 - புதன்கிழமை) நடைபெறுகிறது.

சைதை இரா.லோகநாதன் இளமை பருவத்திலிருந்து கழகத்தில் ஈடுபாடு கொண்டு சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும், பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று தளபதி அவர்களின் நன்மதிப்பை பெற்றும், தளபதி அவர்கள் மேயராக இருந்த பொழுது பல்வேறு பணிகளை செய்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குனராகவும், மாந்தோப்பு ஆண்கள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சைதை இரா.லோகநாதனின் 10 ஆம் ஆண்டு நினைவு நாளில் காக்கும் கரங்கள் முதியோர் இல்லம் ரெயின்போ பார்டர் ரோடு, மேற்கு மாம்பலம், கருணை இல்ல மன வளர்ச் சிக்குன்றிய குழந்தைகள் மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள கருணை இல்லத்தில் பால், பிஸ்கட், கிரீம் காலை உணவும், காசி விஸ்வநாதர் கோவிலில் மதியம் அன்னதானமும் அஜிஸ் நகர் அன்னை முதியோர் இல்லத்தில் பகல் 12 மணிக்கு லயன்ஸ் கிளப் ஜெயராமன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் உணவும் வழங்கப்படுகிறது.

இதில் வட்டக் கழக முன்னோடிகள், கழக தொண்டர்கள், குடும்பத்தி னர் கலந்து கொள்கின்றனர்.



வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் பூண்டி மேற்கு ஒன்றியம் கைவண்டூர் ஊராட்சியில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உலர் கலத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடம் உடன் அரசு நேரடி கொள்முதல் நிலையத்தை வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அதிகாரிகள் இளையராஜா, முத்துக்குமார், திவ்யா, ஏழுமலை, சுனில்குமார், பாபு, சசிரேகா, கழக பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மோதிலால், பட்டரை கே.பாஸ்கரன், எம். சௌக்கர்பாண்டியன், சிவசங்கரி உதயகுமார் , ரெஜினா மோசஸ், பி.சரவணன், வி. எஸ். சதீஷ், எம்.எம். லிங்கேஷ், ராஜாசிங், டி.திருத்துவராஜ் உள்ளிட்ட விவசாயிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரையில் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரின் திருவுருவ சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மேயர் இந்திராணி பொன் வசந்த் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மண்டல தலைவர்கள் சரவண புவனேஸ்வரி, பாண்டிச்செல்வி, பகுதி செயலாளர்கள் அறிவு நிதி, எஸ்.எஸ்.மாறன், பி.கே.செந்தில், சு.பா.கண்ணன் மற்றும் பி.டி.மணிமாறன், முத்து கணேசன், விஜயலட்சுமி பாண்டியன், மிசா பாண்டியன், சௌந்தரராஜன், சுப்பிரமணி, உஸ்மான் அலி, காத்தவராயன், திராவிட மாரி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றார்கள்